2013 மார்ச் 28]

நான் இருக்கிறேன் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அமர்ந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி குறிஞ்சிப்பாடி தொகுதியிலே புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்வு செய்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் குறிஞ்சிப்பாடி தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், என்ன விஷயம், சொல்லுங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் வெளிவந்துள்ள அகில இந்திய அளவில் பிரபலமான ஒரு பத்திரிகையில்,* Times of India *பத்திரிகையில் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதை திடீரென்று சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) திடீரென்று பேசினால் எப்படி? இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதுகுறித்து என்னிடம் முன்பே அனுமதி கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) வேறு ஏதோ பேசப் போகிறீர்கள் என்று நினைத்தால், அறிவிப்புக் கொடுக்காமல் இப்படி பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இதை நான்* allow *பண்ண முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) பத்திரிகையில்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வந்தால் என்ன? (குறுக்கீடுகள்) பத்திரிகைகளில் ஆயிரம் செய்திகள் வருகின்றன; அவை எல்லாவற்றையும் சட்டசபையில் பேச முடியாது. (குறுக்கீடுகள்) என்னிடம் முன்பே நீங்கள் அனுமதி கேட்டிருக்க வேண்டும். பத்திரிகைச் செய்தியை என்னிடம் காண்பித்து அனுமதி வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் திடீரென்று பேசுவது முறையில்லை. (குறுக்கீடுகள்) இதை அவையில் கொண்டு வந்து கொடுத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னரே என்னுடைய அறையில் கொண்டு வந்து கொடுத்து, என்னிடம் அனுமதி வாங்கியிருக்க வேண்டும். திடீரென்று கொடுத்தால் அதை என்னால் எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று வேறு நிறைய அலுவல்கள் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி வாங்கிவிட்டு நீங்கள் பேச வேண்டும். அனுமதியில்லாமல் இப்படிப் பேசக் கூடாது, முறையாக அறிவிப்பைக் கொடுங்கள்; முறையாக அறிவிப்புக் கொடுத்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திடீரென்று இப்படியெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். B.A.C. என்று ஒரு குழு இருக்கிறது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தபடிதான் நான் எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கு எழுப்பினால் என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11–15

ஏற்கெனவே முறையாக அறிவிப்பு கொடுத்து ஒரு Call Attention–ஐ இன்றைக்கு நாம் எடுத்துக்கொள்கிறோம். இதுபோன்று முறையாக அறிவிப்பு கொடுக்காமல், வெளிநடப்பு செய்வதற்கென்றே இவர்கள் திடீரென்று இந்த மாதிரி செய்வது முறையற்ற செயல். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியை சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, க. பாலகிருஷ்ணன்,